## 29.9 நிலை–1 கிராம ஊராட்சிகளின் முழு நேர எழுத்தர்களுக்கு தொகுப்பு ஊதியம் நிர்ணயித்தல்

ஊரக வளர்ச்சி (இ5) துறை

அரசாணை (நிலை) எண். 116 நாள் : 10.05.2000

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.962, ஊரக வளர்ச்சி நாள்–26.11.1990
2. அரசாணை (நிலை) எண்.280, ஊரக வளர்ச்சி நாள்–15.10.1996
3. அரசாணை (நிலை) எண்.86, ஊரக வளர்ச்சி நாள்–08.05.1998
4. அரசாணை (நிலை) எண்.122, ஊரக வளர்ச்சி நாள்–06.07.1999
5. அரசாணை (2டி) எண்.148, ஊரக வளர்ச்சி நாள்–09.07.1999
6. அரசாணை (2டி) எண்.149, ஊரக வளர்ச்சி நாள்–09.07.1999
7. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.58703/99/ஈ1, நாள்–23.07.1999
8. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.27024/99/ஈ1, நாள்–06.04.2000

**ஆணை**

படிக்கப்பட்டவை நான்கில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையில் ஆண்டுக்கு ரூ.3.00 இலட்சத்திற்கு மேல் சொந்த வருவாய் ஆதாரம் உள்ள நிலை 1 கிராம ஊராட்சிகளில் தற்பொழுது இருக்கும் ஊராட்சி உதவியாளர் / பகுதி நேர ஊராட்சி எழுத்தரை சம்பந்தப்பட்ட ஊராட்சியின் மொத்த சம்பள செலவினம் மொத்த சொந்த வருவாயில் பத்து விழுக்காட்டிற்கு மிகாமல், தொகுப்பு ஊதிய அடிப்படையில் முழுநேர கிராம ஊராட்சி எழுத்தராக நியமனம் செய்ய ஆணையிடப்பட்டது. தொகுப்பு ஊதிய உச்ச வரம்பை அரசு நிர்ணயிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டது. ஊரக வளர்ச்சி இயக்குநர் படிக்கப்பட்டவை 6ல் குறிப்பிட்டுள்ள கடிதத்தில் ரூபாய் 3.00 இலட்சத்திற்கு மேல் சொந்த வருவாய் ஆதாரம் உள்ள கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் முழுநேர கிராம ஊராட்சி எழுத்தர்களுக்கு மாதம் ரூ.1800/– தொகுப்பூதியமும், ஆண்டுதோறும் ரூ.50/– தற்காலிக உயர்வும் வழங்கலாம் என்று தெரிவித்தார்.

2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்துரு, அவர் தலைமையில் கிராம ஊராட்சிகளின் பணி அமைப்பினை நிதிநிலைக்கு ஏற்ப சீரமைப்பது குறித்து ஆய்வு செய்ய படிக்கப்பட்டவை 6ல் குறிப்பிட்டுள்ள அரசாணைப்படி அமைக்கப்பட்ட குழுவின் ஆய்விற்கு விடப்பட்டது. இது தொடர்பாக அக்குழு கீழ்க்கண்டவாறு பரிந்துரைத்துள்ளது.

**பரிந்துரை எண். 9**

ரூபாய் 3.00 இலட்சத்திற்கும் கூடுதலாக சொந்த வருவாய் ஆதாரம் உள்ள ஊராட்சியில் பணிபுரியும் முழு நேர எழுத்தர்களுக்கு ஏற்கனவே ஊரக வளர்ச்சி இயக்குநரின்16.7 நாளிட்ட ந.க.எண். 58703/99/ஈ1, கடிதத்தில் பரிந்துரை செய்யப்பட்டவாறு ரூ.1800/–தொகுப்பூதியமும் ஆண்டு ஒன்றிற்கு தற்காலிக உயர்வாக (Adhoc Increase) ரூ.50/–ம் வழங்கி அரசு ஆணையிடலாமென இக்குழு பரிந்துரை செய்கிறது. ரூ.3 இலட்சத்திற்கு மேல் வருவாய் ஆதாரம் உள்ள ஊராட்சிகளில் வரிவசூல், பதிவேடுகள் பராமரித்தல் போன்ற இனங்களில் கூடுதல் பணி பொறுப்புள்ளது. எனவே இந்த ஊராட்சியில் பணிபுரியும் ஊராட்சி உதவியாளர்களுக்கு இப்புதிய ஊதிய முறை ஒரு ஊக்குவிப்பாக அமையும். மேலும் அவர்களுடைய பணியை முழுமையாக பயன்படுத்துவதன் மூலம் ஊராட்சி நிர்வாகம் மேம்படும் வாய்ப்பும் உள்ளது.

3.படிக்கப்பட்டவை மூன்றில் குறிப்பிட்டுள்ள அரசாணைக்கு எதிராகவும், நிதித்துறை அரசாணை நிலை எண். 191, நாள்–29.04.1998ன்படி ஊதியம் நிர்ணயிக்கக் கேட்டும் உயர் நீதி மன்றத்தில் ஊராட்சி உதவியாளர்கள் தொடுத்த நீதிப் பேராணை மனு எண். 9743/99 ஏற்கனவே திரும்பப் பெற்றதாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. எனினும் கீழ்க்கண்ட வழக்குகள் தொடுக்கப்பட்டு முடிவடையாமல் உள்ளன.

| வழக்கு எண். | வழக்கு தொடுத்த சங்கம் / பணியாளர் | நீதி மன்றத்தில் இடைக்கால உத்ததரவு |
|---|---|---|
| 1.நீதிப்பேராணை மனு எண். 7620/99, உயர் நீதி மன்றம், சென்னை | திரு.எஸ்.ராமமூர்த்தி என்பவரை பொதுச் செயலாளராக கொண்ட தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கம் (பதிவு எண். 170/93) | நீதிப்பேராணை பல்வகை மனு 10930/99ல் 29.04.1999 அன்று கூடுதலாக வழங்கிய ஊதியத்தை பிடித்தம் செய்வது ஆறு வாரங்களுக்கு தடைசெய்யப்பட்டது. |
| 2.நீதிப்பேராணை மனு எண். 9025/99, உயர் நீதி மன்றம், சென்னை | திரு.ஆர்.ரங்கராஜ், தலைவராக உள்ள தமிழ்நாடு ஊராட்சி பணியாளர் சங்கம் (69/87) | நீதிப்பேராணை பல்வகை மனு 12876/99ல் 10.06.99 அன்று கூடுதல் வழங்கிய ஊதியத்தை பிடித்தம் செய்வதை ஆறு வாரங்களுக்கு தடை செய்யப்பட்டது. |
| 3.நீதிப்பேராணை மனு எண். 8959/99, உயர் நீதி மன்றம், சென்னை | திரு.கே.முருகேசன். ஊராட்சி உதவியாளர், ஒட்டப்பிடாரம் | நீதிப்பேராணை பல்வகை மனு 12684/99ல் 10.06.99 அன்று கூடுதலாக வழங்கிய ஊதியத்தை பிடித்தம் செய்வது ஆறு வாரங்களுக்கு தடை செய்யப்பட்டது. |
| 4.தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாய முதல் வழக்கு எண். 3499/99 | திரு.கே.முருகன், ஊராட்சி உதவியாளர், ஒட்டப்பிடாரம் | தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயம் இரு வாரங்களுக்கு இடைக்கால தடை ஆணை 25.06.1999 அன்று பிறப்பித்துள்ளது. |
| 5.தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாய முதல் வழக்கு எண். 10638/99 | திரு.வி.குமரேசன், மாநிலத் தலைவராக உள்ள ஊராட்சி உதவியாளர் சங்கம் (பதிவு எண். 576/83) | சங்கத்தின் 17.03.99 நாளிட்ட மனுவின் மீது நான்கு மாதங்களுக்குள் ஆணையிடும்படி பல்வகை மனு எண். 4558 மற்றும் 4559/99ல் 10.9.1999 அன்று ஆணையிடப்பட்டது. |

4.மேலே வரிசை எண். 5ல் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாய ஆணையை கருத்தில் கொண்டு ஊராட்சி உதவியாளர் சங்கத்தின் 17.03.99 நாளிட்ட மனுவில் உள்ள கோரிக்கையும் மேற்குறிப்பிட்ட குழுவின் பரிந்துரையையும் அரசு நன்கு ஆய்வு செய்து அரசுப் பணியாளர் தொடர்பாக வெளியிடப்பட்ட நிதித் துறையின் அரசாணை நிலை எண். 191, நாள்–29.04.1998 ஊராட்சிப் பணியாளர்களுக்கு நீடிக்க இயலாது என்று அரசு முடிவு செய்துள்ளது. மேலும் வழக்குகளின் முடிவுக்கு பாதகம் இல்லாமல் படிக்கப்பட்டவை 4ல் குறிப்பிட்டுள்ள அரசாணைப்படி நியமிக்கப்படலாகும் நிலை–1 கிராம ஊராட்சிகளின் முழுநேர எழுத்தர்களுக்கு சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியின் நிதி நிலைமை மற்றும் வேலை பளு ஆகியவற்றின் அடிப்படையிலும், ஊராட்சியின் மொத்த சம்பள செலவினம் அதன் மொத்த சொந்த வருவாய் ஆதாரத்தில் (10) பத்து விழுக்காட்டிற்கு மிகாமலும் மாதம் ஒன்றுக்கு ரூ. 1800/– மிகாமலும் தொகுப்பூதியம் நிர்ணயம் செய்து கொள்ள அனுமதிக்கவும், கிராம ஊராட்சிகளே இச்செலவினத்தை ஏற்க வேண்டுமென்றும் அரசு முடிவு செய்துள்ளது.

எனவே அரசாணை நிலை எண். 122, ஊரக வளர்ச்சி நாள்–06.07.1999ன்படி நியமிக்கப்படலாகும் கிராம ஊராட்சி நிலை – 1ன் முழுநேர கிராம ஊராட்சி எழுத்தர்களுக்கு சம்பந்தப்பட்ட ஊராட்சியின் நிதிநிலைமை, வேலைபளு ஆகியவற்றின் அடிப்படையிலும் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும் மாதம் ஒன்றுக்கு ரூ.1800/–க்கு மிகாமல் தொகுப்பூதியம் மட்டும் நிர்ணயம் செய்து கொள்ள அனுமதித்து ஆணையிடப்படுகின்றது.

அ. சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியின் மொத்த சம்பள செலவினம் அதன் மொத்த சொந்த வருவாய் ஆதாரத்தில் 10 (பத்து) விழுக்காட்டிற்கு மிகக் கூடாது.

ஆ. இதனால் கிராம ஊராட்சிகளுக்கு ஏற்படும் கூடுதல் செலவினத்தை அந்தந்த கிராம ஊராட்சிகளே ஏற்க வேண்டும். மேற்குறிப்பிட்ட முடிவடையாமல் உள்ள வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ள நிலை – 1 கிராம ஊராட்சிகள் முழுநேர எழுத்தர்களுக்கு ஏற்கனவே அரசுக் கடிதம் எண். 41880/இ5/98, நாள்–16.7.99 மற்றும் 23.7.99ல் அறிவுறுத்தியபடி 31.8.98 முன் வழங்கப்பட்ட ஊதியத்தை வழக்குகள் முடிந்து மறு உத்தரவு வெளியிடப்படும் வரை வழங்கி வருமாறும் ஏனையோருக்கு இந்த அரசாணையின் பத்தி 5ன்படி ஊதியம் வழங்குமாறும் அரசு ஆணையிடுகின்றது.

இந்த அரசாணையை அனைத்து நிலை – 1 கிராம ஊராட்சித் தலைவர்களுக்கும் உதவி இயக்குநர்களுக்கும், வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் உடனடியாக அனுப்பி வைக்குமாறும் நிபந்தனைகள் சரியாக கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதை கண்காணிக்குமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இந்த அரசாணை நிதித் துறையின் அரசாணை எண். 1370/FS/P/2000, நாள்–2000ல் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்